வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 5698 /ஆ1/2025 நாள். .11.2025

பொருள்:- பள்ளிக் கல்வி - வேலூர் மாவட்டம் - மாவட்டக் கல்வி அலுவலகம்(இடைநிலை) மற்றும் அனைத்து வகை அரசு/அரசு உதவிபெறும் உயர்நிலை/மேல்நிலை பள்ளிகளில் பொதுத் தகவல் வழங்கும் அலுவலராகவும், மேல்முறையீட்டு அலுவலராகவும் பொறுப்பில் உள்ள நபர்களின் விவரங்கள் பெறப்பட்டது - அதன் அடிப்படையில் பொது தகவல் வழங்கும் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்கள் user Id. Password வழங்கப்படுகிறது- தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்தல் - சார்பு

பார்வை:- பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.055104/F/RTI/2025 நாள்.30.10.2025

..........

வேலூர் மாவட்டத்தில் உள்ள மாவட்டக்கல்விஅலுவலகம்(இடைநிலை) மற்றும் அனைத்து அரசு/அரசுஉதவி பெறும் உயர்நிலை/ மேல்நிலைபள்ளிகளின் பொதுத்தகவல் வழங்கும் அலுவலராகவும், மேல்முறையீட்டு அலுவலராகவும் பொறுப்பில் உள்ள நபர்களின் விவரங்களை Google Sheet மூலம் சேகரித்து EXCEL format-இல் தங்களிடமிருந்து பெறப்பட்டது. தற்போது தங்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து பொதுத்தகவல் வழங்கும் அலுவலர் மற்றும் முதல் UserID, Password மேல்முறையீட்டு அலுவலர்களுக்கு தனித்தனியாக உருவாக்கப்பட்டு இத்துடன் இணைத்து தங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. User ID-யை மாற்றம் செய்யஇயலாது. Password-யை மாற்றி பின்னர் Login செய்து பயன்படுத்த வேண்டும்.

எனவே,தங்கள் UserIDஐ பெற்றுக்கொண்டு Passwordஐ மாற்றி அமைத்து பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது. ஒவ்வொரு பொதுத்தகவல் வழங்கும் அலுவலரும் நாள்தோறும்https://rtionline.tn.gov.in/RTIMIS/NODAL/index.phpமேற்கண்டLinkஐஇணையத்தில்OPEN செய்து பார்த்தால் வரப்பட்டுள்ள தகவல் அறியும் உரிமைச் சட்டமனுக்கள் மற்றும் மேல்முறையீட்டு மனுக்கள் ஆகியவற்றினை பதிவிறக்கம் செய்து உடனுக்குடன் உரிய தகவலை இணையத்தின் வழியாகவே வழங்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

இதற்கென தனியாக ஒருபதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். பிரதிமாதம்5ஆம்தேதிக்குள் உயர்அலுவலருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்..

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள PDF படிவத்தில் தங்கள் UserID-ல் பெறப்பட்ட தகவல்கள் உடனுக்குடன் கண்டறிந்து அதனை உடனடியாக இதே படிவத்தில் பூர்த்திசெய்து பொதுத்தகவல் அலுவலரிடம் ஒப்பம்பெற்று இவ்வலுவலக மின்னஞ்சலுக்கு அனுப்பிவிட்டு அதன் பிரதி நகல் கையொப்பமிட்ட ஆவணங்களை நேரில் சமர்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் தங்கள் பள்ளிக்கு உண்டான UserID, Password இவ்வலுவலகத்தில் 26/11/2025 & 27/11/2025 அன்று நேரில் பெற்றுக்கொள்ளுமாறு அனைத்து தலைமைஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

/ஒப்பம்/

முதன்மைக் கல்வி அலுவலர்,

வேலூர்.

பெறுநர்,

1. மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை)மாவட்டக் கல்வி அலுவலகம்,வேலூர்.
2. அனைத்து அரசு/நகராட்சி/ஆதிதிராவிடர் நல/அரசு உதவி பெறும் உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்